1970 ஏப்ரல் 6]

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : தலைவர் அவர்களே, நீண்ட காலமாக மின்சார இலாகாவிலே பணிபுரிந்தவர்கள் அந்த இலாகாவிலே இருப்பதற்கு விண்ணப்பித்தால் அனுமதிக்கலாமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, நீண்ட காலமாக இருப்பவர்கள் அங்கேயே இருக்கலாம். குறைந்தது ஓர் ஆண்டு காலம் தொடர்ந்து வேலைசெய்தாலே அவர்களுக்கு போனஸ் போன்றவை கொடுக்கப்படுகிறது. நிரந்தரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது, கூடுமான வரையில் அப்படிச் செய்துவருகிறோம்.

கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி கிராமங்களுக்கு மின் இணைப்பு

***708 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி ஆகிய கிராமங்களுக்குரிய மின் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ)&(இ) திருமயம் வட்டத்திலுள்ள மின்திட்டத்துக்கான கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி ஆகிய கிராமங்களுக்குரிய மின் திட்டம் நிறைவேற்றப்பட்டு இக்கிராமங்களுக்கு மின்சக்தி 9–2–1970 அன்று வழங்கப்பட்டது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கருப்பகுடிப்பட்டி, குமாரப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு வீதி விளக்கிற்கு மின்திட்டம் நிறைவேற்றப்பட்டமை குறித்து அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, அங்கே இருக்கக்கூடிய கேணிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கக் கூடிய திட்டம் இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. ஆகவே, அதை விரைவில் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆவன செய்யலாம்.

Instruction classes for labourers

*** 709 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—**

(*a*) whether this Government has any proposal to convene a conference of Labourers, industialists and other representatives to discuss about starting of training classes throughout the State to educate the workers about labour laws, etc., to enable them to help in negotiating with the Managememt ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ)&(இ) ஆம். செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. விரைவில் தொழிலாளர் கல்வித் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்த, அதற்கென்று அமைந்துள்ள தொழிலாளர் கல்வி வட்டார இயக்குநர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர் தலைவர்கள் அடங்கிய முக்கூட்டுக் கூட்டத்தைக் கூட்ட திட்டமிட்டிருக்கிறேன்.